**பொ.து.ந.க.எண்.பி4/14992/09**
**ஆணையாளர் அவர்களின் 16.06.2009 நாளிட்ட குறிப்பு**

**22.07.2009 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :206/2009 பொருள் எண்.6

**ஓய்வூதியம்**

சென்னை மாநகராட்சி, மண்டலம்–9, வருவாய் துறையில் உதவி வருவாய் அலுவலராக பணிபுரிந்து வயது முதிர்வு காரணமாக 30.06.2007 பி.ப. அன்று பணியிலிருந்து ஓய்வு பெற்ற திரு.எஸ்.சம்பத்குமார், என்பவருக்கு கீழ்கண்டவாறு ஓய்வூதியப் பயன்களை வழங்க உள்ளாட்சி நிதி தணிக்கை சான்றின் கடிதம் நி.மு.எண்.1232/எ4/2008, நாள்.20.05.2009 அன்று வழங்கப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| ஓய்வூதியம் 01.07.2007 முதல் மாதம் | ரூ.6207/– |
| இறப்பு மற்றும் ஓய்வுக்கால பணிக்கொடை | ரூ.2,76,507/– |
| மாதத் தொகுப்புத் தொகை | ரூ.2069/– |
| குறைக்கப்பட்ட மாத ஓய்வூதியம் | ரூ.4138/– |
| தொகுப்பு மதிப்பீட்டுத் தொகை | ரூ.2,59,701/– |
| ஓய்வூதியரின் காலத்திற்கு பின்னர் அன்னாரது மனைவி திருமதி.எஸ். பிரபாவதி, என்பவருக்கு குடும்ப ஓய்வூதியம் மாதம் | ரூ.6207/– 03.06.2014 முடிய<br>ரூ.3724/– 04.06.2014 முதல் |

இவர் 33 ஆண்டுகள் 08 மாதங்கள் 10 நாட்கள் சென்னை மாநகராட்சியில் பணிபுரிந்துள்ளார்.

மேற்படி அலுவலரிடமிருந்து அன்னாரின் பணிக்கொடையில் கீழ்கண்ட தொகைகள் பிடித்தம் செய்யப்பட வேண்டியுள்ளது.

25% பணிக்கொடை தணிக்கைதடை பிடித்தம் ரூ.69127/–
மிகை ஊதியம் ரூ.41159/–
மொத்தம் ரூ.1,10,286

மேற்படி தனியர் இறப்பு மற்றும் ஓய்வுக்கால பணிக்கொடையில் பிடித்தம் செய்யப்பட்ட 25 விழுக்காடு தொகை அன்னாரின் மீதான தணிக்கை தடைகள் தீர்வு செய்யப்பட்ட பின்பு மீள வழங்கவும்,

இவர் சென்னை மாநகராட்சி 2ம் வகுப்பு அலுவலரானதால் மன்றத்தின் அனுமதி பெறப்பட்ட பின்னரே மேற்கண்ட ஓய்வூதிய பயன்கள் வழங்கப்பட வேண்டும்.

எனவே, 30.06.2007 பி.ப. முதல் வயது முதிர்வு ஓய்வு பெற்ற உதவி வருவாய் அலுவலர் திரு.எஸ்.சம்பத்குமார், அவர்களுக்கு மேற்படி தொகைளை பிடித்தம் செய்து உள்ளாட்சி நிதி தணிக்கை துறையின் சான்றின்படி மேற்கண்ட ஓய்வூதிய பயன்கள் அளிக்க நியமனக்குழுவின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது "

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:பொ.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**பொ.து.ந.க.எண்.பி4/14995/09**
**ஆணையாளர் அவர்களின் 25.06.2009 நாளிட்ட குறிப்பு**

**22.07.2009 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :207/2009 பொருள் எண்.7

**ஓய்வூதியம் பின்னேற்பு அனுமதி**

மண்டலம்–9, வருவாய் பிரிவில் உதவி வருவாய் அலுவலர் ஆக பணிபுரிந்து 31.10.2008 பி.ப. முதல் வயது முதிர்வு ஓய்வு பெற்ற திரு.கே.ஆர்.சேகர், அவர்களுக்கு 11.02.2009 நாளிட்ட தணிக்கை சான்றில் கீழ்கண்ட ஓய்வூதியப் பயன்களை வழங்க சான்றளிக்கப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| ஓய்வூதியம் 01.11.2008 முதல் மாதம் | ரூ.6413/– |
| இறப்பு மற்றும் பணிக்கொடை | ரூ.3,25,892/– |
| மாதத் தொகுப்புத் தொகை | ரூ.2137/– |
| குறைக்கப்பட்ட மாத ஓய்வூதியம் | ரூ.4276/– |
| தொகுப்பு மதிப்பீட்டுத் தொகை | ரூ.2,68,237/– |
| ஓய்வூதியரின் காலத்திற்கு பின்னர் அன்னாரது மனைவி திருமதி.எஸ். சக்குபாய், அவர்களுக்கு குடும்ப ஓய்வூதியம் மாதம் | ரூ.6413/– 14.10.2015 வரை<br>ரூ.3848/– 15.10.2015 முதல் |

தேர்தல் பணிகாரணமாக மன்றம் ஒத்தி வைக்கப்பட்டதால் காலதாமத்தினை தவிர்க்கும் பொருட்டு தனியருக்கு மேற்கண்ட ஓய்வூதிய பயன்களை மன்றத்தின் பின்னேற்புக்குட்பட்டு 23.03.2009 நாளிட்ட ஆணையரின் ஆணை பெற்று வழங்கப்பட்டது.

எனவே, 31.10.2008 பி.ப. முதல் வயது முதிர்வு ஓய்வுபெற்ற உதவி வருவாய் அலுவலர் திரு.கே.ஆர்.சேகர், அவர்களுக்கு கீழ்கண்ட ஓய்வூதியப்பயன்கள் வழங்கியமைக்கு மன்றத்தின் பின்னேற்பு ஒப்புதல் வேண்டப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது "

‘‘இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது’’
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:பொ.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**பொது.ந.க.எண்.பி13/961/2009**
**ஆணையரின் 03.07.2009 நாளிட்ட குறிப்பு**

**22.07.2009 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :208/2009 பொருள் எண்.8

**ஓய்வூதியம்**

திரு. கே. திருநாவுக்கரசு, முதுநிலை பூச்சியியல் வல்லுநர், மண்டலம்–2 அவர்கள் பணியிலிருந்து 31.10.2008 முதல் வயது முதிர்வு ஓய்வு பெற்றார். தனியர் 38 வருடங்கள் 05 மாதங்கள் 23 நாட்கள் (அ) 66 அரை ஆண்டுகள் தகுதிப்பணி புரிந்தமையால், துணை இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை, நி.மு.எண்.130/எ4/2009, நாள் 04–02–2009 சான்றின்படி 01.11.2008 முதல் வயது முதிர்வு ஓய்வூதியமாக மாதம் ரூ.9,094/–, இறப்பு மற்றும் ஓய்வுகாலப் பணிக்கொடையாக ரூ.3,50,000/– மற்றும் ஓய்வூதியத்திலிருந்து ரூ.3,031/– தொகுத்துப் பெறவும், அவ்வாறு தொகுத்துப் பெறும் மதிப்பீட்டுத் தொகை ரூ.3,80,452/– பெறவும் தகுதியுடையவராகிறார்.

ஓய்வூதியரின் காலத்திற்குபின் அன்னாரது வாரிசுதாரர் மனைவி, திருமதி. டி. புவனேஸ்வரி அவர்கள் உயர்த்தப்பட்ட குடும்ப ஓய்வூதியமாக மாதம் ரூ.9,094/– 11.10.2015 வரையிலும், சாதாரண குடும்ப ஓய்வூதியம் 12.10.2015 முதல் ரூ.5,457/– பெறவும் தகுதியுடையவராகிறார்.

மேற்கண்ட ஓய்வூதியப் பயன்கள் வழங்குதல் சம்பந்தமாக துணை இயக்குநர், உள்ளாட்சி நிதி தணிக்கைத்துறை அவர்களின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

தனியர் சென்னை மாநகராட்சி இரண்டாம் பிரிவு (வகுப்பு) அலுவலரானதால் மன்றத்தின் தீர்மானம் பெறப்பட்ட பின்னரே மேற்கண்ட ஓய்வூதிய பயன்கள் வழங்கப்படவேண்டும். காலதாமதத்தை தவிர்க்கும் பொருட்டு திரு. கே. திருநாவுக்கரசு, ஓய்வுபெற்ற முதுநிலை பூச்சியியல் வல்லுநர், மண்டலம்–2 அவர்களுக்கு தணிக்கை சான்றின்படி ஓய்வூதிய பயன்கள் மன்றத்தின் பின்னேற்பு அனுமதிக்குட்பட்டு ஆணையரின் ஆணை பெற்று, செயல்முறை ஆணை, பொ.து.ந.க.எண்.பி13/961/2009, நாள் 11.04.2009–ன் மூலம் வழங்கப்பட்டது.

எனவே, திரு. கே. திருநாவுக்கரசு, முதுநிலை பூச்சியியல் வல்லுநர், மண்டலம்–2 அவர்களுக்கு 01.11.2008 முதல் ஓய்வூதியமாக மாதம் ரூ.9,094/– வழங்கியமைக்கும், இறப்பு மற்றும் ஓய்வுகாலப் பணிக்கொடையாக ரூ.3,50,000/–ல் தணிக்கைத்தடையின் காரணமாக 25 விழுக்காடு தொகையான ரூ.87,500/– பிடித்தம் செய்து மீத தொகையான ரூ.2,62,500/– வழங்கியமைக்கும், தனியரின் மீதுள்ள தணிக்கைத்தடைகளை நிவர்த்தி செய்தபின்பு பணிக்கொடையில் பிடித்தம் செய்யப்பட்ட 25 விழுக்காடு தொகையை விடுவிக்கவும், மற்றும் ஓய்வூதியத்திலிருந்து ரூ.3,031/–(ரூபாய் மூவாயிரத்து முப்பத்தி ஒன்று மட்டும்) தொகுத்துப் பெறவும் அவ்வாறு தொகுத்துப் பெறும் மதிப்பீட்டுத் தொகை ரூ.3,80,452/– (ரூபாய் மூன்று லட்சத்து எண்பதாயிரத்து நானூற்று ஐம்பத்தி இரண்டு மட்டும்) வழங்கியமைக்கும், தொகுத்துப் பெறுவதால் அவரது ஓய்வூதியம் ரூ.9,094/–லிருந்து ரூ.6,063/–ஆக குறைத்து வழங்கவும் ஓய்வூதியரின் காலத்திற்குபின் அன்னாரது வாரிசுதாரர் மனைவி, திருமதி. டி. புவனேஸ்வரி அவர்களுக்கு உயர்த்தப்பட்ட குடும்ப ஓய்வூதியமாக மாதம் ரூ.9,094/– 11.10.2015 வரையிலும், சாதாரண குடும்ப ஓய்வூதியம் 12.10.2015 முதல் ரூ.5,457/–வழங்கவும் நியமனக்குழு மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது "

‘‘இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது’’
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:பொ.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**பொது.ந.க.எண்.பி13/877/2009**
**ஆணையரின் 02.07.2009 நாளிட்ட குறிப்பு**

**22.07.2009 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :209/2009 பொருள் எண்.9

**ஓய்வூதியம்**

திரு. மு. பாலகிருஷ்ணன், பொது பகுப்பாய்வாளர், சுகாதாரத் துறை அவர்கள் பணியிலிருந்து 31.05.2007 பி.ப. முதல் வயது முதிர்வு ஓய்வு பெற்றார். தனியர் 36 வருடங்கள் 00 மாதங்கள் 11 நாட்கள் (அ) 66 அரை ஆண்டுகள் தகுதிப்பணி புரிந்தமையால், துணை இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை, நி.மு.எண்.35/எ4/2009, நாள் 23.01.2009 சான்றின்படி 01.06.2007 முதல் திருத்திய வயது முதிர்வு ஓய்வூதியமாக மாதம் ரூ.11,157/– மற்றும் ஓய்வூதியத்திலிருந்து ரூ.3,719/– தொகுத்துப் பெறவும், அவ்வாறு தொகுத்துப் பெறும் மதிப்பீட்டுத் தொகை ரூ.4,66,809/– பெறவும் தகுதியுடையவராகிறார்.

ஓய்வூதியரின் காலத்திற்குபின் அன்னாரது வாரிசுதாரர் மனைவி, திருமதி. அருள்பிரேமாராணி அவர்கள் உயர்த்தப்பட்ட குடும்ப ஓய்வூதியமாக மாதம் ரூ.10,950/– 31.05.2014 வரையிலும், சாதாரண குடும்ப ஓய்வூதியம் 01.06.2014 முதல் ரூ.6,570/– பெறவும் தகுதியுடையவராகிறார்.

மேற்கண்ட ஓய்வூதியப் பயன்கள் வழங்குதல் சம்பந்தமாக துணை இயக்குநர், உள்ளாட்சி நிதி தணிக்கைத்துறை அவர்களின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

தனியர் சென்னை மாநகராட்சி இரண்டாம் பிரிவு (வகுப்பு) அலுவலரானதால் மன்றத்தின் தீர்மானம் பெறப்பட்ட பின்னரே மேற்கண்ட திருத்திய ஓய்வூதிய பயன்கள் வழங்கப்படவேண்டும். காலதாமதத்தை தவிர்க்கும் பொருட்டு திரு. மு. பாலகிருஷ்ணன், ஓய்வுபெற்ற பொது பகுப்பாய்வாளர், சுகாதாரத் துறை அவர்களுக்கு தணிக்கை சான்றின்படி திருத்திய ஓய்வூதிய பயன்கள் மன்றத்தின் பின்னேற்பு அனுமதிக்குட்பட்டு ஆணையரின் ஆணை பெற்று, செயல்முறை ஆணை, பொ.து.ந.க.எண்.பி13/877/09, நாள் 20.04.2009–ன் மூலம் திருத்திய ஓய்வூதிய பயன்கள் வழங்கப்பட்டது.

எனவே, திரு. மு. பாலகிருஷ்ணன், பொது பகுப்பாய்வாளர், சுகாதாரத் துறை அவர்களுக்கு 01.06.2007 முதல் ஓய்வூதியமாக மாதம் ரூ.11,157/–ல் ஏற்கனவே வழங்கப்பட்ட ஓய்வூதியம் ரூ.10,022/– யை நேர் செய்து வழங்கியமைக்கும் மற்றும் ஓய்வூதியத்திலிருந்து ரூ.3,719/– (ரூபாய் மூவாயிரத்து ஏழுநூற்று பத்தொன்பது மட்டும்)–ஐ தொகுத்துப் பெறவும் அவ்வாறு தொகுத்துப் பெறும் மதிப்பீட்டுத் தொகை ரூ.4,66,809/– (ரூபாய் நான்கு லட்சத்து அறுபத்தி ஆறாயிரத்து எண்ணூற்று ஒன்பது மட்டும்)–ல் ஏற்கனவே வழங்கப்பட்ட தொகுப்புத் தொகை ரூ.4,19,237/– நேர் செய்து மீதத் தொகை ரூ.47,572/– (ரூபாய் நாற்பத்தி ஏழாயிரத்து ஐநூற்று எழுபத்தி இரண்டு மட்டும்) வழங்கியமைக்கும், தொகுத்துப் பெறுவதால் அவரது ஓய்வூதியம் ரூ.11,157/–லிருந்து ரூ.7,438/–ஆக குறைத்து வழங்கவும் ஓய்வூதியரின் காலத்திற்குபின் அன்னாரது வாரிசுதாரர் மனைவி, திருமதி. அருள்பிரேமாராணி அவர்கள் உயர்த்தப்பட்ட குடும்ப ஓய்வூதியமாக மாதம் ரூ.10,950/– 31.05.2014 வரையிலும், சாதாரண குடும்ப ஓய்வூதியம் 01.06.2014 முதல் ரூ.6,570/– வழங்கவும், நியமனக்குழு மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது "

“இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:பொ.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(சு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**பொது.ந.க.எண்.பி13/15538/2009**
**ஆணையரின் 06.07.2009 நாளிட்ட குறிப்பு**

**22.07.2009 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :210/2009 பொருள் எண்.10

**ஓய்வூதியம்**

டாக்டர் (திருமதி) பி. காஞ்சன மாலா, மண்டல அலுவலர், மாவட்ட குடும்ப நலத் துறை அவர்கள் பணியிலிருந்து 31.05.2008 முதல் வயது முதிர்வு ஓய்வு பெற்றமைக்கு மன்றத் தீர்மான எண்.352, நாள் 30.07.2008ல் மன்றத்தின் பின்னேற்பு அனுமதி பெறப்பட்டுள்ளது. தனியர் 29 வருடங்கள் 03 மாதங்கள் 05 நாட்கள் (அ) 59 அரை ஆண்டுகள் தகுதிப்பணி புரிந்தமையால், துணை இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை, நி.மு.எண்.1210/எ4/2009, நாள் 10.06.2009 சான்றின்படி 01.06.2008 முதல் வயது முதிர்வு ஓய்வூதியமாக மாதம் ரூ.10,676/–, இறப்பு மற்றும் ஓய்வுகாலப் பணிக்கொடையாக ரூ.3,50,000/– மற்றும் ஓய்வூதியத்திலிருந்து ரூ.3,558/– தொகுத்துப் பெறவும், அவ்வாறு தொகுத்துப் பெறும் மதிப்பீட்டுத் தொகை ரூ.4,46,601/– பெறவும் தகுதியுடையவராகிறார்.

ஓய்வூதியரின் காலத்திற்குபின் அன்னாரது வாரிசுதாரர் கணவர் திரு. ஆர். ராமன் அவர்கள் குடும்ப ஓய்வூதியமாக மாதம் ரூ.10,676/– 29.05.2015 வரையிலும், குறைக்கப்பட்ட குடும்ப ஓய்வூதியம் 30.05.2015 முதல் ரூ.6,514/– பெறவும் தகுதியுடையவராகிறார்.

மேற்கண்ட ஓய்வூதியப் பயன்கள் வழங்குதல் சம்பந்தமாக துணை இயக்குநர், உள்ளாட்சி நிதி தணிக்கைத்துறை அவர்களின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

இவர் சென்னை மாநகராட்சி இரண்டாம் பிரிவு (வகுப்பு) அலுவலரானதால் மன்றத்தின் அனுமதி பெறப்பட்ட பின்னரே மேற்கண்ட ஓய்வூதியப் பயன்கள் வழங்கப்பட வேண்டும்.

ஆகையால், டாக்டர் (திருமதி) பி. காஞ்சன மாலா, மண்டல அலுவலர், மாவட்ட குடும்ப நலத் துறை அவர்களுக்கு 01.06.2008 முதல் ஓய்வூதியமாக மாதம் ரூ.10,676/– இறப்பு மற்றும் ஓய்வுகாலப் பணிக்கொடையாக ரூ.3,50,000/–ல் தணிக்கைத்தடையின் காரணமாக 25 விழுக்காடு தொகையான ரூ.87,500/– பிடித்தம் செய்து மீத தொகையான ரூ.2,62,500/– வழங்கவும், தனியரின் மீதுள்ள தணிக்கைத்தடைகளை நிவர்த்தி செய்தபின்பு பணிக்கொடையில் பிடித்தம் செய்யப்பட்ட 25 விழுக்காடு தொகையை விடுவிக்கவும், மற்றும் ஓய்வூதியத்திலிருந்து ரூ.3,558/–(ரூபாய் மூவாயிரத்து ஐநூற்று ஐம்பத்தி எட்டு மட்டும்) தொகுத்துப் பெறவும் அவ்வாறு தொகுத்துப் பெறும் மதிப்பீட்டுத் தொகை ரூ.4,46,601/– (ரூபாய் நான்கு லட்சத்து நாற்பத்தி ஆறாயிரத்து ஆறுநூற்று ஒன்று மட்டும்) வழங்கவும், தொகுத்துப் பெறுவதால் அவரது ஓய்வூதியம் ரூ.10,676/–லிருந்து ரூ.7,118/–ஆக குறைத்து வழங்கவும், தனியரது காலத்திற்குபின் அன்னாரது வாரிசுதாரர் கணவர் திரு. ஆர். ராமன் அவர்களுக்கு குடும்ப ஓய்வூதியமாக மாதம் ரூ.10,676/– 29.05.2015 வரையிலும், குறைக்கப்பட்ட குடும்ப ஓய்வூதியம் 30.05.2015 முதல் ரூ.6,514/– வழங்கவும் நியமனக்குழு மூலமாக மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது "

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:பொ.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**பொது.ந.க.எண்.பி13/1158/2009**

**ஆணையரின் 03.07.2009 நாளிட்ட குறிப்பு**

**22.07.2009 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :211/2009 பொருள் எண்.11

**ஒய்வூதியம்**

டாக்டர் (திரு) எம். சாம்பமூர்த்தி, மருத்துவ அலுவலர், சுகாதாரத் துறை, வயது முதிர்வு அடைந்தமையால் பணியிலிருந்து 31.07.2005 பிற்பகல் முதல் ஓய்வு பெற்றார். அவர் 21 வருடங்கள் 07 மாதங்கள் 10 நாட்கள் (அல்லது) 43 அரை ஆண்டுகள் தகுதிப்பணி புரிந்தமையால், சென்னை மாநகராட்சி ஆணையரது செயல்முறை ஆணை, பொ.து.ந.க.எண்.பி13/31985/2006, நாள் 09.10.2006—ன்படி தற்காலிக ஓய்வூதியமாக ரூ.3,011/— மற்றும் தற்காலிக பணிக்கொடைத் தொகை ரூ.1,59,251/— வழங்கப்பட்டுள்ளது. துணை இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை, நி.மு.எண்.195/எ4/2008, நாள் 11.02.2009 சான்றின்படி தனியருக்கு அனுமதிக்கப்பட்ட திருத்திய ஓய்வூதியப் பயன்கள் விவரம் பின்வருமாறு :

| | திருத்தியமைக்கப்பட்ட ஓய்வூதிய பயன்கள் |
|---|---|
| அ. வயது முதிர்வு திருத்திய ஓய்வூதியம் (01/08/2005 முதல்) | ரூ.4,471/— |
| ஆ. இறப்பு மற்றும் ஓய்வுகாலப் பணிக்கொடை | ரூ.2,21,794/— |
| தொகுப்பு | ரூ.1,490/— |
| தொகுப்பு தொகை | ரூ.1,87,025/— |

ஓய்வூதியரின் காலத்திற்குபின் அன்னாரது மனைவி திருமதி. எஸ். வசுமதி அவர்களுக்கு உயர்த்தப்பட்ட குடும்ப ஓய்வூதியமாக மாதம் ரூ.4,471/—ஐ 31/07/2012 முடியவும், அதன் பின்னர் சாதாரண குடும்ப ஓய்வூதியம் 01.08.2012 முதல் ரூ.3,743/— பெறவும் தகுதியுடையவராகின்றார்.

தனியர் சென்னை மாநகராட்சி இரண்டாம் பிரிவு (வகுப்பு) அலுவலரானதால் மன்றத்தின் தீர்மானம் பெறப்பட்ட பின்னரே மேற்கண்ட திருத்திய ஓய்வூதிய பயன்கள் வழங்கப்படவேண்டும். காலதாமதத்தை தவிர்க்கும் பொருட்டு டாக்டர் (திரு) எம். சாம்பமூர்த்தி, ஓய்வுபெற்ற மருத்துவ அலுவலர், மண்லம்—7 அவர்களுக்கு தணிக்கை சான்றின்படி திருத்திய ஓய்வூதிய பயன்கள் மன்றத்தின் பின்னேற்பு அனுமதிக்குட்பட்டு ஆணையரின் ஆணை பெற்று, செயல்முறை ஆணை, பொ.து.ந.க.எண்.பி13/1158/2009, நாள் 04.04.2009—ன் மூலம் வழங்கப்பட்டது.

எனவே, டாக்டர் (திரு) எம். சாம்பமூர்த்தி, ஓய்வுபெற்ற மருத்துவ அலுவலர், மண்டலம்—7 அவர்களுக்கு தணிக்கை சான்றின்படி திருத்திய ஓய்வூதிய பயன்களாக வயது முதிர்வு ஓய்வூதியமாக ரூ.4,471/—ஐ ஏற்கனவே வழங்கப்பட்ட தற்காலிக ஓய்வூதியமான ரூ.3,011/—லிருந்து அதிகரித்து ஓய்வூதியம் வழங்கியமைக்கும், இறப்பு மற்றும் ஓய்வுகாலப் பணிக்கொடையாக ரூ.2,21,794/— (ரூபாய் இரண்டு லட்சத்து இருபத்தி ஓராயிரத்து ஏழுநூற்று தொண்ணூற்று நான்கு மட்டும்)—ல் ஏற்கனவே வழங்கப்பட்ட தற்காலிக பணிக்கொடை ரூ.1,59,251/—ஐ நேர் செய்து மீதத் தொகை ரூ.62,543/—ல் தணிக்கை தடைகள் காரணமாக 25 விழுக்காடுத் தொகை ரூ.15,636/— (ரூபாய் பதினைந்தாயிரத்து ஆறுநூற்று முப்பத்தி ஆறு மட்டும்) போக மீதத் தொகை ரூ.46,907/— (ரூபாய் நாற்பத்தி ஆறாயிரத்து தொள்ளாயிரத்து ஏழு மட்டும்) வழங்கியமைக்கும், தணிக்கைத் தடை நிவர்த்தி செய்தபிறகு 25 விழுக்காடு பிடித்தம் தொகை மீள வழங்கவும், மற்றும் ஓய்வூதியத்திலிருந்து ரூ.1,490/—ஐ தொகுத்துப்பெறவும், அவ்வாறு தொகுத்துப்பெறும் மதிப்பீட்டுத் தொகை ரூ.1,87,025/— (ரூபாய் ஒரு லட்சத்து எண்பத்தி ஏழாயிரத்து இருபத்தி ஐந்து மட்டும்) வழங்கியமைக்கும், தொகுத்துப் பெறுவதால் அன்னாருக்கு ஓய்வூதியம் ரூ.4,471/—ல் இருந்து ரூ.2,981/—ஆக குறைத்து வழங்கவும், ஓய்வூதியரின் காலத்திற்குப்பின் அன்னாரது மனைவி திருமதி. எஸ். வசுமதி அவர்களுக்கு உயர்த்தப்பட்ட குடும்ப ஓய்வூதியமாக மாதம் ரூ.4,471/—ஐ 31/07/2012 முடியவும், அதன் பின்னர் சாதாரண குடும்ப ஓய்வூதியம் 01.08.2012 முதல் ரூ.3,743/— வழங்கவும் நியமனக்குழு மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது "

“இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:பொ.து.

நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ—18. மன்றச் செயலாளர்

**பொது.ந.க.எண்.பி13/8859/2009**
**ஆணையரின் 02.07.2009 நாளிட்ட குறிப்பு**

**22.07.2009 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :212/2009 பொருள் எண்.12

**ஓய்வூதியம்**

டாக்டர் (திருமதி) சி. ரவிந்திரி, மருத்துவ அலுவலராக மண்லம்–7ல் பணிபுரிந்து வயது முதிர்வு அடைந்தமையால் பணியிலிருந்து 30.11.2008 பிற்பகல் முதல் ஓய்வு பெற்றார். அவர் 32 ஆண்டுகள் 08 மாதங்கள் 14 நாட்கள் (அ) 65 அரை ஆண்டுகள் தகுதிப்பணி புரிந்தமையால், துணை இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை, நி.மு.எண்.314/எ4/2009, நாள் 02.03.2009 சான்றின்படி 01.12.2008 முதல் வயது முதிர்வு ஓய்வூதியமாக மாதம் ரூ.11,588/–, இறப்பு மற்றும் ஓய்வுகாலப் பணிக்கொடையாக ரூ.3,50,000/– மற்றும் ஓய்வூதியத்திலிருந்து ரூ.3,862/– தொகுத்துப் பெறவும், அவ்வாறு தொகுத்துப் பெறும் மதிப்பீட்டுத் தொகை ரூ.4,84,759/– பெறவும் தகுதியுடையவராகிறார்.

ஓய்வூதியரின் காலத்திற்குபின் அன்னாரது கணவர் திரு. பி. ஜனார்த்தனன் அவர்களுக்கு குடும்ப ஓய்வூதியமாக மாதம் ரூ.10,950/–ஐ 07/11/2015 முடியவும், அதன் பின்னர் 08/11/2015 முதல் ரூ.6,570/– பெறவும் தகுதியுடையவராகின்றார்.

தனியர் சென்னை மாநகராட்சி இரண்டாம் பிரிவு (வகுப்பு) அலுவலரானதால் மன்றத்தின் தீர்மானம் பெறப்பட்ட பின்னரே மேற்கண்ட ஓய்வூதிய பயன்கள் வழங்கப்படவேண்டும். காலதாமதத்தை தவிர்க்கும் பொருட்டு டாக்டர் (திருமதி) சி. ரவிந்திரி, ஓய்வுபெற்ற மருத்துவ அலுவலர், மண்லம்–7 அவர்களுக்கு தணிக்கை சான்றின்படி ஓய்வூதிய பயன்கள் மன்றத்தின் பின்னேற்பு அனுமதிக்குட்பட்டு ஆணையரின் ஆணை பெற்று, செயல்முறை ஆணை, பொ.து.ந.க.எண்.பி13/8859/2009, நாள் 30/04/2009–ன் மூலம் வழங்கப்பட்டது.

எனவே, மண்டலம்–7ல் மருத்துவ அலுவலராக பணிபுரிந்து 30/11/2008 பிற்பகல் வயது முதிர்வு ஓய்வுபெற்ற டாக்டர் (திருமதி) சி. ரவிந்திரி அவர்களுக்கு மேற்கண்ட தணிக்கைச் சான்றின்படி, 01.12.2008 முதல் வயது முதிர்வு ஓய்வூதியமாக ரூ.11,588/– வழங்கியமைக்கும், இறப்பு மற்றும் ஓய்வுகாலப் பணிக்கொடையாக ரூ.3,50,000/– (ரூபாய் மூன்று லட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்)–ல் தணிக்கை தடைகள் காரணமாக பிடித்தம் செய்ய வேண்டிய 25 விழுக்காடு பணிக்கொடை தொகை ரூ.87,500/– (ரூபாய் எண்பத்தி ஏழாயிரத்து ஐநூறு மட்டும்) போக மீதம் ரூ.2,62,500/– (ரூபாய் இரண்டு லட்சத்து அறுபத்தி இரண்டாயிரத்து ஐநூறு மட்டும்) வழங்கியதற்கும், தணிக்கைத் தடைகள் நிவர்த்தி செய்த பிறகு 25 விழுக்காடு பிடித்தம் தொகையை மீள வழங்கவும், மற்றும் ஓய்வூதியத்திலிருந்து ரூ.3,862/–ஐ தொகுத்துப்பெறவும், அவ்வாறு தொகுத்துப்பெறும் மதிப்பீட்டுத் தொகை ரூ.4,84,759/– (ரூபாய் நான்கு லட்சத்து எண்பத்தி நான்காயிரத்து ஏழுநூற்று ஐம்பத்தி ஒன்பது மட்டும்) வழங்கியதற்கும், தொகுத்துப் பெறுவதால் அன்னாருக்கு ஓய்வூதியம் ரூ.11,588/–ல் இருந்து ரூ.7,726/– ஆக குறைத்து வழங்கவும், ஓய்வூதியரின் காலத்திற்குப்பின் அன்னாரது கணவர் திரு. பி. ஜனார்த்தனன் அவர்களுக்கு குடும்ப ஓய்வூதியமாக மாதம் ரூ.10,950/– 07.11.2015 வரையிலும் அதன் பின்னர் 08.11.2015 முதல் ரூ.6,570/– வழங்கவும் மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது "

“இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:பொ.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

ம.அ6.ந.க.எண்.அ4/1683/2005
ஆணையாளர் அவர்களின் 20.02.2009 நாளிட்ட குறிப்பு

22.07.2009 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்

தீர்மான எண் :213/2009 பொருள் எண்.13

பிழைப்பூதியம் வழங்க அனுமதி

மண்டலம்–6, பகுதி–17, ஓட்டுநராக பணிபுரிந்து வந்த திரு.கே.முருகேசன், என்பவர் எஸ்.சி.என். 171/2003 என்ற குற்ற வழக்கு தொடர்பாக 04.05.2003 அன்று காவல்துறையால் கைது செய்யப்பட்டது குறித்தும், 05.05.2003 அன்று முதல் 04.06.2003 வரையிலான காலத்தில் சிறையில் அடைக்கப்பட்டிருந்தது குறித்தும், இவ்வலுவலகத்திற்கு தகவல் ஏதும் தெரிவிக்காமல் இருந்ததோடு சிறையிலிருந்த காலத்திற்கு உடல்நிலை பாதிக்கப்பட்டிருந்தது என்று பொய்யான மருத்துவ சான்றை சமர்ப்பித்தது ஊதியம் பெற்ற குற்றத்திற்காக உதவி ஆணையர் மண்டல அலுவலகம்–6 அவர்களின் 30.04.2005 நாளது செயல்முறை ஆணையின்படி 03.04.2005 முதல் தற்காலிக பணிநீக்கம் செய்யப்பட்டார். தனியர் மீது துணை விதி 9(2)ன்படி ஒழுங்கு நடவடிக்கை தொடரப்பட்டு குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டு, விளக்கம் பெறப்பட்டது. தனியர் மீது தொடரப்பட்ட ஒழுங்கு நடவடிக்கை குறித்து, நேர்முக விசாரணை நடத்த விசாரணை அலுவலர் நியமிக்கப்பட்டு விசாரணை நடத்தி முடிக்கப்பட்டது. விசாரணை அலுவலரிடமிருந்து விசாரணை அறிக்கை பெறப்பட்டது. இறுதி ஆணை எதிர்நோக்கி உள்ளது. தனியர் பணிநீக்க காலத்திற்கு வழங்கப்பட வேண்டிய பிழைப்பூதியம் வழங்கிட கோரியதன் பேரில், உதவி ஆணையாளர், மண்டலம்–6, அவர்களின் உத்தரவின்படி, மே 2005 முதல் அக்டோபர் 2005 முடிய 50 விழுக்காடு பிழைப்பூதியம் வழங்கப்பட்டுள்ளது.

தனியர் தற்காலிக பணிநீக்கம் செய்து 6 மாதங்களுக்கு அதிகமானதால் நவம்பர் 2005 முதல் 75 விழுக்காடு பிழைப்பூதியம் வழங்க ஆணை வேண்டப்பட்டதில், மீண்டும் 6 மாதங்களுக்கு 50 விழுக்காடு பிழைப்பூதியம் வழங்கிட ஆணையாளர் அவர்கள் 16.03.2006 நாளது ஆணை வழங்கப்பட்டதின்படி, தனியருக்கு நவம்பர் 2005 முதல் ஏப்ரல் 2006 முடிய 6 மாதங்களுக்கு 50 விழுக்காடு பிழைப்பூதியம் வழங்கப்பட்டது.

மீண்டும் தனியர் தனது கடிதத்தில் தான் சென்னையை விட்டு வெளியே செல்லவில்லை என்றும், வேறு எங்கும் பணி செய்யவில்லை என்றும், தனது குடும்பம் வறுமையில் உள்ளதால் மே 2006 முதல் ஜுலை 2006 முடிய பிழைப்பூதியம் வழங்கிட வேண்டி விண்ணபித்ததின் பேரில், அன்னாருக்கு மே 2005 முதல் ஏப்ரல் 2006 வரையிலும் 50 விழுக்காடு பிழைப்பூதியம் வழங்க ஆணையாளரின் 19.06.2006 நாளிட்ட உத்தரவு பெற்று வழங்கப்பட்டது.

மேலும், தனியர் தனது கடிதத்தில் தான் சென்னையை விட்டு வெளியே செல்லவில்லை என்றும், வேறு எங்கும் பணி செய்யவில்லை என்றும், தனது குடும்பம் வறுமையில் உள்ளதால் பிப்ரவரி 2008 முதல் ஜனவரி 2009 முடிய பிழைப்பூதியம் வழங்கிட வேண்டியும் கேட்டுக்கொண்டு 02.01.2009 நாளது கடிதம் சமர்பித்துள்ளார்.

III அமர்வு நீதிமன்றத்தின் நீதிபதி அவர்கள் S.C.No.121/2004ல் வழங்கப்பட்ட தீர்ப்பின் மீது தனியர் மேல்முறையீடு செய்துள்ள வழக்கில் தற்போது விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

எனவே, திரு.கே. முருகேசன், ஓட்டுநர், மண்டலம்–6, (தற்காலிக பணிநீக்க காலத்தில் உள்ளவர்) அவர்களுக்கு தற்காலிக பணிநீக்கம் செய்யப்பட்ட மே 2005 முதல் ஜனவரி 2008 வரை 50 விழுக்காடு பிழைப்பூதியம் வழங்கப்பட்டு வந்ததைத் தொடர்ந்து பிப்ரவரி 2008 முதல் தனியர் மீண்டும் பணியில் எடுத்துக்கொள்ளும் நாள் வரை 50 விழுக்காடு பிழைப்பூதியம் வழங்க அரசின் கருத்து வேண்டி அரசுக்கு செயற்குறிப்பு அனுப்ப மன்றத்தின் ஒப்புதல் நியமனக்குழு மூலமாக வேண்டப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது "

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:ம.அ.6.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**மா.கு.ந(ம) ம.கு.ந.எண்.எப்4/00489/2009**
**ஆணையாளர் அவர்களின் 05.03.2009 நாளிட்ட குறிப்பு**

**22.07.2009 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :214/2009 பொருள் எண்.14

**சிறப்பு நிலை வழங்க அனுமதி**

டாக்டர். திருமதி. என்.சசிகலா, மருத்துவ அலுவலர், வடபழனி, மண்டலம், என்பவர் மருத்துவ அலுவலராக 12.10.1988 முற்பகல் திருவண்ணாமலை நகராட்சியில் பணியமர்த்தப்பட்டார். 28.07.1989ல் சென்னை மாநகராட்சியில், மாவட்ட குடும்ப நலத்துறையில் மாற்றம் செய்யப்பட்டார். இவரது பணியை அரசாணை (ப) எண். 410 MAWS நாள் 05.07.89ன்படி 12.10.1988 முதல் வரன்முறைப்படுத்தியும் 17.10.1990 பிற்பகல் முதல் தகுதிகாண் பருவம் முடித்தவராகவும் அறிவிக்கப்பட்டு மன்ற தீர்மான எண்.564/03, நாள்.20.10.2003ன்படி ஏற்றுக்கொள்ளப்பட்டது.

தனியர் மீது துறை ஒழுங்கு நடவடிக்கையும் ஏதுமில்லை. இவருக்கு தண்டனை ஏதும் வழங்கப்படவில்லை.

எனவே, கணக்கு அலுவலர், பகுதி கணக்கு குழுமம், மாவட்ட குடும்ப நலம் அவர்கள் இவருக்கு மருத்துவ அலுவலர் பதவியின் சிறப்பு நிலை காலமுறை சம்பள விகிதம் திருத்திய சம்பள ஊதிய குழுவின் கணக்கின்படி ரூ.10000–325–15200ல் ரூ.12600+75PP + 300 சிறப்பு ஊதியம் 12.10.2008 முதல் வழங்க கருத்திசைவு அளித்துள்ளார். இவரின் பணி பற்றிய விவரம் கீழே தெரிவிக்கப்பட்டுள்ளது.

| வ. எண்<br><br>01 | மருத்துவ அலுவலரின் பெயர்<br><br>02 | பணிவரன் முறை நாள்<br><br>03 | தகுதி காண் பருவம் பூர்த்தி அடைந்த நாள்<br><br>04 | சம்பளம் இல்லா விடுப்பு துய்த்த நாள்<br><br>05 | தேர்வு நிலை வழங்கிய நாள்<br><br>06 |
|---|---|---|---|---|---|
| 01. | டாக்டர். திருமதி. என். சசிகலா | 12.10.1988 | 17.10.1990 | இல்லை | 12.10.1998 |

| 20 ஆண்டு முடித்த நாள்<br><br>07 | இதற்கு முந்தைய ஆண்டுகளில் தண்டனை<br><br>08 | சிறப்பு நிலைக்கு தகுதியுடையவரா<br><br>09 | சிறப்பு நிலை வழங்க வேண்டிய நாள்<br><br>10 |
|---|---|---|---|
| 11.10.2008 பி.ப. | – – – | ஆம் | 12.10.2008 |

டாக்டர். என்.சசிகலா, மருத்துவ அலுவலர், வடபழனி, மண்டலம், அவர்களுக்கு சிறப்பு நிலை காலமுறை சம்பளம் வழங்கபட வேண்டும், மருத்துவ அலுவலர் பதவியில் 20 ஆண்டு பணியை 11.10.2008ல் முடித்துள்ளதால் அடிப்படை சம்பளம் ரூ.12600+75PP + 300 சிறப்பு ஊதியம் என காலமுறை சம்பள விகிதம் ரூ. 10000–325–15200ல் 12.10.2008 முதல் வழங்க மாமன்றத்தின் அனுமதி நியமனக்குழு மூலமாக வேண்டப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது "

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:மா.கு.ந.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**மா.கு.ந(ம)ம.கு.ந.எண்.எப்4/356/2009**
**ஆணையாளர் அவர்களின் 24.06.2009 நாளிட்ட குறிப்பு**

**22.07.2009 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :215/2009 பொருள் எண்.15

**சிறப்பு நிலை வழங்க அனுமதி**

டாக்டர். திருமதி. எஸ். சரஸ்வதி, மருத்துவ அலுவலர், வடபழனி மண்டலம், மருத்துவ அலுவலராக 22.08.79ல் சென்னை மாநகராட்சி மாவட்ட குடும்ப நலத்துறையில் பணியமர்த்தப்பட்டார். இவரது பணியினை அரசாணை (ப) எண். 1894 H&FW நாள் 13.10.81ன்படி 22.08.79 பிற்பகல் முதல் வரன்முறைப்படுத்தியும் 02.03.82 முதல் தகுதிகாண் பருவம் முடித்தவராகவும் அறிவிக்கப்பட்டு மன்ற தீர்மான எண்.986/83, நாள்.30.09.1983ன்படி ஏற்றுக்கொள்ளப்பட்டது.

தனியர் மீது துறை ஒழுங்கு நடவடிக்கை ஏதுமில்லை. இவருக்கு தண்டனை ஏதும் வழங்கப்படவுமில்லை.

எனவே, கணக்கு அலுவலர், பகுதி கணக்கு குழுமம், மாவட்ட குடும்ப நலம் அவர்கள் இவருக்கு மருத்துவ அலுவலர் பதவியின் சிறப்புநிலை காலமுறை சம்பள விகிதம் திருத்திய சம்பள ஊதிய குழுவின் கணக்கின்படி ரூ.10000–325–15200ல் ரூ.10975+50PP +300 சிறப்பு ஊதியம் 28.02.2000 முதல் வழங்க கருத்திசைவு அளித்துள்ளார். இவரின் பணி பற்றிய விவரம் கீழே தெரிவிக்கப்பட்டுள்ளது.

| வ. எண் | மருத்துவ அலுவலரின் பெயர் | பணிவரன் முறை செய்த நாள் | தகுதி காண் பருவம் பூர்த்தி அடைந்த நாள் | சம்பளம் இல்லா விடுப்பு துய்த்த நாள் | தேர்வு நிலை வழங்கிய நாள் |
|---|---|---|---|---|---|
| 01 | 02 | 03 | 04 | 05 | 06 |
| 01. | டாக்டர். எஸ்.சரஸ்வதி | 22.08.1979 | 02.03.1982 | 24.09.79 to 23.08.80<br>26.03.80 to 02.04.80<br>190 நாட்கள் | 28.02.1990 |

| 20 ஆண்டு முடித்த நாள் | முந்தைய ஆண்டுகளில் தண்டனை | சிறப்பு நிலைக்கு தகுதியுடையவரா | சிறப்பு நிலை வழங்கப்பட வேண்டிய நாள் |
|---|---|---|---|
| 07 | 08 | 09 | 10 |
| 27.02.2000 பி.ப | ஏதுமில்லை | ஆம் | 28.02.2000 |

டாக்டர் எஸ். சரஸ்வதி, மருத்துவ அலுவலர், வடபழனி, மண்டலம், அவர்களுக்கு சிறப்பு நிலை காலமுறை சம்பளம் வழங்க வேண்டும். மருத்துவ அலுவலர் பதவியில் 20 ஆண்டு பணியை 27.07.2000ல் முடித்துள்ளதால் அடிப்படை சம்பளம் ரூ.10975+50PP +300 சிறப்பு ஊதியம் என காலமுறை சம்பள விகிதம் ரூ.10000–325–15200ல் 28.02.2000 முதல் வழங்க மன்றத்தின் அனுமதி நியமனக்குழு மூலம் வேண்டப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது "

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:மா.கு.ந.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**மா.கு.ந(ம) ம.கு.ந.எண்.எப்1/1181/08**
**ஆணையாளர் அவர்களின் 26.06.2009 நாளிட்ட குறிப்பு**

**22.07.2009 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :216/2009 பொருள் எண்.16

**தேர்வு நிலை வழங்க அனுமதி**

டாக்டர் திருமதி. அன்னம்மா ஜான், மருத்துவ அலுவலராக, 4.2.70ல் பணியில் சேர்ந்தார். இவரது பணியை அரசாணை எண் 2391 சு (ம) கு.ந.துறை நாள் 26.10.74ன் படி உறுதியாக்கம் செய்யப்பட்டு 3.8.72 முதல் தகுதிகாண் பருவம் முடித்தவராக அறிவிக்கப்பட்டுள்ளார். இவருக்கு மருத்துவ அலுவலர் பதவியில் 03.08.80 முதல் தேர்வு நிலை வழங்கப்பட்டுள்ளது. தேர்வு நிலை வழங்கப்பட்டதிலிருந்து அன்னார் பணிக்காலத்தில் ஊதியமில்லா விடுப்பு எதுவும் துய்க்கவில்லை.

அன்னாருக்கு 18.07.89 முதல் மண்டல அலுவலராக பதவி உயர்வு அளிக்கப்பட்டு அரசாணை எண் 548 (MC &WS) நாள் 06.12.99ன்படி உறுதியாக்கம் செய்யப்பட்டு அன்னார் வயது முதிர்வு காரணமாக 31.05.96ல் பணி ஓய்வு பெற்றுள்ளார்.

அரசாணை எண்.210 ப(ம)நி.சீ.துறை நாள் 11.3.87–ன்படி, கீழ்பதவியின் தேர்வு நிலை காலமுறை ஊதிய விகிதமும், உயர் பதவியின் சாதாரண நிலை காலமுறை ஊதிய விகிதமும் ஒன்றேயாயின், உயர் பதவியில் தேர்வு நிலைக்கு, கீழ் பதவியின் தேர்வு நிலை காலத்தையும் கணக்கில் கொண்டு உயர் பதவியில் தேர்வு நிலை வழங்கலாம்.

இதன் அடிப்படையில்10.06.09 நாளிட்ட, கணக்கு அலுவலர் (மா.கு.ந.துறை) அவர்கள் டாக்டர் (திருமதி). அன்னம்மா ஜான் அவர்களுக்கு, மருத்துவ அலுவலர் பதவியில் தேர்வுநிலை வழங்கிய நாள் 03.08.80 லிருந்து ஊதியமில்லா விடுப்பின்றி, 10 வருட தொடர் பணியை முடித்து **(பதவி உயர்வு நாள் 18.07.89)** , 03.08.90 முதல் மண்டல அலுவலர் பதவியில் தேர்வுநிலை அனுமதித்து, தேர்வு நிலை காலமுறை ஊதிய விகிதம் ரூ. 3000–100–3500–125–4500ல் அடிப்படை ஊதியம் ரூ 3500+150 த.ஊ நிர்ணயம் செய்ய கருத்துரு வழங்கியுள்ளார்கள்.

டாக்டர் திருமதி. அன்னம்மா ஜான் மண்டல அலுவலர் (ஓய்வு) மீது விழிப்பு குழுமத்திலும் (ம) துறையிலும் 3.08.90 அன்று ஒழுங்கு நடவடிக்கை ஏதுமில்லை. இவருக்கு தண்டனை எதுவும் வழங்கப்படவில்லை.

எனவே டாக்டர் திருமதி.அன்னம்மா ஜான் மண்டல அலுவலர் (ஓய்வு 31.05.96) அவர்களுக்கு மண்டல அலுவலர் பதவியில் ரூ 3000–100–3500–125–4500 என்ற தேர்வு நிலை ஊதிய விகிதத்தில் அடிப்படை ஊதியம் ரூ 3500 + 150 த.ஊ நிர்ணயித்து 03.08.90 முதல் வழங்க மன்றத்தின்ஆணை வேண்டப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது "

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:மா.கு.ந.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

ம.அ7.உ.சு.அ.ந.க.எண்.எச்1/1048/2006
ஆணையாளர் அவர்களின் 16.06.2009 நாளிட்ட குறிப்பு

22.07.2009 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்

தீர்மான எண் :217/2009 பொருள் எண்.17

பணிக்கு வராத காலம் வரன்முறைப்படுத்துதல்

திரு.என்.அமாவாசை, களப்பணி உதவியாளர், சுகாதாரப் பிரிவு, மண்டலம்—7, அவர்கள் 09.05.2005 பிற்பகல் முதல் தன்விருப்ப ஓய்வில் செல்ல நியமனக்குழுவின் பின்னேற்பு ஆணைக்குட்பட்டும், தனியர் சென்னை மாநகராட்சி கூட்டுறவு சங்கம் மற்றும் சென்னை மாநகராட்சி தணிக்கை தடை மற்றும் இதர இனங்கள் வாயிலாக திரும்ப செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை இருப்பின் இத்தொகை அனைத்தும் தனியருக்கு வழங்க உள்ள பணிக்கொடையில் பிடித்தம் செய்யப்படும் என்ற நிபந்தனைக்குட்பட்டும் அனுமதி வழங்கப்பட்டது.

தீர்மான எண்.161/2007, நாள்.03.05.2007ன்படி தனியர் அவர்கள் 09.05.2005 அன்று தன்விருப்ப ஓய்வில் செல்ல அனுமதித்ததற்கு நியமனக்குழு பின்னேற்பு அனுமதி அளித்தது.

தனியரின் தன்விருப்ப ஓய்வு நாள். 09.05.2005, சுகாதாரத்துறை, மண்டலம்—7, அவர்களின் பணிப்பதிவேடு பக்கம்—11ல் 12.03.1991 முதல் 14.03.1991 தற்காலிக பணிநீக்கம் செய்யப்பட்டு 15.03.1991 முதல் பணியில் சேர அனுமதிக்கப்பட்டுள்ளார். மேலும், தனியர் 01.04.1992 முதல் 24.05.1994 வரை பணிக்கு வராத காலத்திற்கு ஒருவருட ஊதிய உயர்வு நிறுத்தப்பட்டுள்ளது.

துணை இயக்குநர், உள்ளாட்சி நிதித்தணிக்கை அவர்களது 28.04.2008 நாளிட்ட கடிதத்தில் தனியரின் பணிக்காலத்தில் ஒரு வருடத்திற்கு மேலாக ஊதியமில்லா விடுப்பு துய்த்தமைக்கு அரசின் தளர்வாணை பெற்று ஓய்வூதியக் கருத்துரு அனுப்பி வைக்குமாறு கோரப்பட்டுள்ளது.

எனவே, திரு.என்.அமாவாசை, களப்பணி உதவியாளர், சுகாதாரப் பிரிவு, மண்டலம்—7, தன்விருப்ப ஓய்வு பெற்றவர் தன் பணிக்காலத்தில் ஒரு வருடத்திற்கு மேலாக ஊதியமில்லா விடுப்பு துய்த்ததற்கு அரசின் தளர்வாணை பெற நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது "

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:ம.அ.7.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ—18. மன்றச் செயலாளர்

**<u>ம.அ9.ந.க.எண்.அ6/2052/07</u>**
**<u>ஆணையாளர் அவர்களின் 22.06.2009 நாளிட்ட குறிப்பு</u>**

**<u>22.07.2009 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்</u>**

தீர்மான எண் :218/2009 பொருள் எண்.18

**<u>பணிக்கு வராத காலம் வரன்முறைப்படுத்துதல்</u>**

சென்னை மாநகராட்சி, மண்டலம்–9, பகுதி–26, கோட்டம்–138ல் பணிபுரிந்த திரு.எ.அமலதாஸ், துப்புரவு பணியாளர், பணிஎண்.553437, அவர்கள் தனது உடல் நலம் மற்றும் குடும்ப சூழ்நிலை காரணமாக தன்விருப்ப ஓய்வு கோரி தலைவர், நியமனக்குழு அவர்களுக்கு 02.04.2007, அன்று விண்ணபித்தார். தனியர் விண்ணபித்துள்ளதன் அடிப்படையில் பணிப்பதிவேட்டினை பார்வையிட்டபொழுது சென்னை மாநகராட்சியில் 25.06.1984 முதல் பணி நியமனம் பெற்ற தனியர் 01.01.1995 முதல்15.08.1996 வரை சம்பளமில்லா விடுப்பு மற்றும் 16.08.1996 முதல் 24.10.1997 வரை காசநோய் விடுப்பும் துய்த்துள்ளார். அவர் தொடர்ச்சியாக துய்த்துள்ள விடுப்பு நாள்கள் சுமார் 3 வருடங்கள் இருப்பதினாலும் ஒழுங்கு நடவடிக்கை ஏதும் மேற்கொள்ளப்படாததாலும் அடிப்படை விதி 18(2)ஐ தளர்வு செய்ய அரசின் தளர்வாணை பெறப்பட வேண்டும். இருப்பினும் தனியருக்கு 01.01.1995 முதல் 24.10.1997 வரை பணிக்கு வராதக் காலத்தினை வரன்முறைப்படுத்திட அடிப்படை விதி 18(2)ஐ தளர்த்தி அரசின் தளர்வாணை பெற்ற பின்னர் தான் ஓய்வு கால பணப்பயன்கள் வழங்கப்படும் என்ற நிபந்தணைக்குட்பட்டு தனியருக்கு 30.06.2007 பிற்பகல் முதல் தன்விருப்ப ஓய்வு அனுமதிக்கப்பட்டு நியமனக்குழுவின் பின்னேற்பு பெறப்பட்டது.

பின்னர் தனியருக்கு முழுமையான ஓய்வூதியம் பெற்று வழங்கிட அன்னார் பணிக்காலத்தில் 01.01.1995 முதல் 15.08.1996 வரை ஓராண்டுக்கு மேலாக பணிக்கு வராதக் காலத்தினை வரன்முறைப்படுத்திட மன்றத்தின் பின்னேற்புக்குட்பட்டு அடிப்படை விதி 18(2)ஐ தளர்த்தி அரசாணை பெற அரசுக்கு முன்மொழிவு அனுப்பியததில் 02.01.2008 நாளிட்ட அரசு கடிதத்தில் அப்போதைய அடிப்படை விதி 18(3)ன்படி தண்டனை வழங்கப்படாமைக்கு விளக்கமும், உள்ளாட்சி நிதி தணிக்கைத்துறையின் கருத்துரை பெற்று அனுப்பிடக் கோரப்பட்டுள்ளதை தொடர்ந்து 14.10.2008 நாளிட்ட உள்ளாட்சி நிதி தணிக்கைத் துறையின் கருத்துரை பெறப்பட்டது. அதில் தனியரின் பணிப்பதிவேடு தொகுதி–1, பக்கம்–24ன்படி அன்னாருக்கு 01.01.1995 முதல் 30.04.1996 முடிய, 01.05.1995 முதல் 31.08.1995 முடிய 01.09.1995 முதல் 31.01.1996 முடிய மற்றும் 01.02.1996 முதல் 15.08.1996 வரை ஊதியமில்லா விடுப்புகள் அனுமதிக்கப்பட்டுள்ளது. மேலும், மேற்படி விடுப்பினைத் தொடர்ந்து அன்னாருக்கு 435 நாட்கள் காசநோய் விடுப்பும், அனுமதிக்கப்பட்டுள்ளது. இதிலிருந்து இவர் ஊதியமில்லா விடுப்பு விண்ணப்பம் முன்னரே அளித்து அதன்படி விடுப்புகள் அனுமதிக்கப்பட்டுள்ளதாக தெரிகிறது. ஆகவே, தனியர் முன்னறிவிப்பின்றி வேலைக்கு வராமல் இல்லை என்பது தெளிவாகிறது. ஆதலால் அடிப்படை விதி 18(3)ன்படி இவர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டிய நிலை எழவில்லை எனவும், இதற்கு அரசின் தளர்வாணை பெறப்பட வேண்டியதில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, 30.06.2007 அன்று தன்விருப்ப ஓய்வு பெற்ற திரு.எ.அமலதாஸ், துப்புரவு பணியாளர், கோட்டம்–138, பகுதி–26, மண்டலம்–9, அவர்கள் பணிக்காலத்தில் 01.01.1995 முதல் 15.08.1996 வரை பணிக்கு வராதக் காலத்தினை வரன்முறைப்படுத்திட உள்ளாட்சி நிதி தணிக்கைத் துறையின் கருத்துரையின்படி அடிப்படை விதி 18(3)ன் மீது அரசின் தளர்வாணை பெற வேண்டியதில்லை என்பதால் தனியர் பணிக்கு வராத 01.01.1995 முதல் 15.08.1996 வரை ஒரு ஆண்டுக்கும் மிகையான காலத்தினை வரன்முறைப்படுத்திட அடிப்படை விதி 18(2)ஐ தளர்த்தி உரிய அரசாணை வேண்டி அரசுக்கு முன்மொழிவு அனுப்பிட நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது "

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:ம.அ.9.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

ம.அ9.ந.க.எண்.அ6/1436/2001
ஆணையாளர் அவர்களின் 19.09.2008 நாளிட்ட குறிப்பு

22.07.2009 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்

தீர்மான எண் :219/2009 பொருள் எண்.19

## பணிக்கு வராத காலம் வரன்முறைப்படுத்துதல்

சென்னை மாநகராட்சி, மண்டலம்–8ல் 12.01.1998 அன்று முதல் திரு.எம்.கிருஷ்ணன், நிரந்தர துப்புரவு பணியாளராக பணிநியமனம் செய்யப்பட்டு 16.08.2000 அன்று முதல் மண்டலம்–9க்கு பணியிடமாற்றம் செய்து பகுதி–26, கோட்டம்–138, ரீச்–34ல் பணிபுரிந்து தற்போது மண்டலம்–4ல் பணிபுரியும் திரு.எம்.கிருஷ்ணன், பணி எண்.732432 என்பவர் முன்னர் மண்டலம்–9ல் பணிபுரிந்தபோது கடந்த 13.10.2000 அன்று முதல் எவ்வித முன்னறிவிப்புமின்றி பணிக்கு வராத செயலுக்காக உரிய விளக்கம் கோரி 15.11.2000 நாளிட்ட குறிப்பாணை தனியருக்கு 17.01.2001 அன்று சார்வு செய்யப்பட்டது. குறிப்பாணையை பெற்றுக்கொண்ட தனியர் உரிய விளக்கம் சமர்ப்பிக்கவில்லை.

தனியர் குறிப்பாணைக்கு விளக்கம் சமர்பிக்காததால் அன்னார்மீது சென்னை மாநகராட்சி மூன்று மற்றும் நான்காம் நிலைப் பணியாளர்கள் (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) துணைவிதி எண்.9(1)ன் கீழ் குற்றச்சாட்டுகள் ஏற்படுத்தப்பட்டு 22.03.2001 நாளிட்ட குற்றக்குறிப்பாணையை தனியர் அலுவலகத்திற்கு தெரிவித்த கடைசி இல்ல முகவரிக்கு பதிவு அஞ்சலில் அனுப்பப்பட்டு அஞ்சல் துறையின் குறிப்புடன் சார்பாகாமல் திரும்பப் பெறப்பட்டதைத் தொடர்ந்து தனியரின் கடைசி இல்ல முகவரியில் பார்வையில்படும் இடத்தில் 06.06.2001 அன்று ஒட்டப்பட்டு சார்பு செய்யப்பட்டது உரிய காலம் முடிந்தும் தனியர் விளக்கம் ஏதும் சமர்ப்பிக்கவில்லை.

தனியர் மீது துணைவிதி 9(1)ன் கீழ் குற்றச்சாட்டுக் குறிப்பாணைக்கும் உரிய காலம் முடிந்தும் தனியரால் விளக்கம் சமர்ப்பிக்காததால் நிகழ்வின் கடுமையை கருத்தில் கொண்டும். அடிப்படை விதி 18(1)ஐ மீறப்பட்டதை ஆய்வு செய்தும் தனியர் மீதான துணைவிதி 9(1)ன் கீழான குற்றச்சாட்டுகள் விலக்கிக்கொள்ளப்பட்டு சென்னை மாநகராட்சி மூன்றாம் மற்றும் நான்காம் நிலைப் பணியாளர்கள் (ஒழுங்கு மற்றம் மேல்முறையீடு) துணை விதி 9(2)ன் கீழ் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டு 17.09.2001 நாளிட்ட குற்றச்சாட்டுக் குறிப்பாணை வாயிலாக பின்வரும் நான்கு குற்றச்சாட்டுகள் சுமத்தி உரிய விளக்கம் கோரப்பட்டு மேற்கண்ட குற்றச்சாட்டுக் குறிப்பாணை தனியருக்கு 21.09.2001 அன்று நேரடியாக சார்வு செய்யப்பட்டது.

**குற்றச்சாட்டு:–1** 13.10.2000 முதல் முன்னறிவிப்பின்றி பணிக்கு வரவில்லை விடுப்புக் கடிதம், முன்அனுமதி பெறவில்லை.

**குற்றச்சாட்டு:–2** குறிப்பாணை, குற்றச்சாட்டுக் குறிப்பாணைகளைப் பெற்றுக்கொண்டும் உரிய காலத்திற்குள் விளக்கம் அளிக்கவில்லை.

**குற்றச்சாட்டு:–3** அலுவலக நடைமுறைகளை அவமதித்து நடப்பது.

**குற்றச்சாட்டு:–4** துப்புரவு பணியில் பாதிப்பு ஏற்படக் காரணமாக இருப்பது.

மேற்படி 21.09.2001 நாளிட்ட குற்றக்குறிப்பாணையை பெற்றுக்கொண்ட தனியர் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளுக்கான தனது விளக்கத்தினை 24.09.2001 அன்று சமர்ப்பித்தார். தனியர் தனது விளக்கத்தில் பின்வருமாறு தெரிவித்துள்ளார்.

**குற்றச்சாட்டு1க்கு விளக்கம்:–** மண்டலம்–9, பகுதி–26ரீச் 34ல் துப்புரவு பணியாளராக பணிபுரிந்து வந்து கடந்த 13.10.2000 முதல் முன்னறிவிப்பின்றி பணிக்கு வரவில்லை எனவும், தான் ஏற்கெனவே காசநோயால் பாதிக்கப்பட்டு அது அதிகமாகிவிட்டபடியால் தன்னால் தொடர்ந்து பணிக்கு வரமுடியாமல் 13.10.2000 முதல் வேலைக்கு வரவில்லை. பகுதி அலுவலகம்–26க்கோ அல்லது ரீச்–34க்கோ தகவல் அளிக்க தன்னால் முடியாமல் போய்விட்டது எனவும் வீட்டில் தன் மனைவியை தவிர வேறு விவரம் தெரிந்த நபர்யாரும் இல்லாததால் விடுப்பு கடிதம் அளிக்கவோ முன் அனுமதி பெறவோ தெரியவில்லை. தான் காசநோய்க்காக தொடர்ந்து தீவிர சிகிச்சை பெற்றுக்கொண்டு தற்போது உடல்நிலை சரியாகிவிட்டபடியால் தற்போது தன்னை பணியில் சேர அனுமதி அளிக்கும்படி மிகவும் தாழ்மையுடன் வேண்டி கேட்டுக்கொள்கிறேன். எனவும் தற்போது தான் மிகவும் வறுமையில் இருப்பதால் வேலையில் சேர அனுமதிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். எனவும் விளக்கம் அளித்துள்ளார்.

**குற்றச்சாட்டு 2க்கு விளக்கம்:–** குறிப்பாணை குற்றச்சாட்டுக்களை பெற்றுக்கொண்டு பதில் அளிக்க அதாவது எழுத தெரியாததால் தெரிந்தவரிடம் எழுதி அளிக்க இருந்த சமயம் உடல்நிலை சரி இல்லாத காரணத்தால் உரிய காலத்திற்குள் விளக்கம் அளிக்க முடியவில்லை.

**குற்றச்சாட்டு3க்கு விளக்கம்:–** அலுவலக நடைமுறைகள் எழுத படிக்க தெரியாத காரணத்தால் வேண்டும் என்றே அவமதித்து நடக்க வேண்டும் என்று தான் செய்யவில்லை.

<u>ம.அ9.ந.க.எண்.அ6/1436/2001</u>

**<u>குற்றச்சாட்டு4க்கு விளக்கம்:-</u>** ஆகவே இக்காரணங்களால் தான் தன்னால் பணிக்கு வர முடியாமல் இருந்ததால் நான் பணிக்கு வரவில்லை என்றும், பணிபாதிப்பு ஏற்பட வேண்டும் என்று நான் ஒருபோதும் எண்ணியதில்லை என்றும், இந்த ஏழையின் வாழ்க்கையை காப்பாற்ற வாழ்வளிக்க தன்னை இம்முறை மன்னித்து பணியில் சேர அனுமதி அளிக்கும்படி மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன் என விளக்கம் அளித்துள்ளார்.

தனியர் விளக்கம் சமர்ப்பித்ததைத் தொடர்ந்து அன்னார் மீதான ஒழுங்கு நடவடிக்கைக்கு குந்தகமின்றி மீளப் பணியில் சேர அனுமதிக்கப்பட்டு தனியர் 03.12.2001 அன்று மீண்டும் பணியில் சேர்த்துக்கொள்ளப்பட்டார்.

தனியர் மீதான குற்றச்சாட்டுகள் மீது உள்விசாரணை மேற்கொள்ளப்பட்டு விசாரணை அலுவலரின் 31.08.2006 நாளிட்ட விசாரணை அறிக்கை பெறப்பட்டது. விசாரணை அலுவலர் தனது விசாரணை அறிக்கையில் தனியர் மீது சுமத்தப்பட்ட நான்கு குற்றச்சாட்டுகளில் அனைத்துக் குற்றச்சாட்டுகளும் நிரூபணமாவதாக தெரிவித்துள்ளார். விசாரணை அலுவலரின் அறிக்கை தனியருக்கு சார்வு செய்யப்பட்டு தனியரின் 27.11.2006 நாளிட்ட கூடுதல் விளக்கம் பெறப்பட்டது தனியர் தனது கூடுதல் விளக்கத்தில் ஏற்கனவே அளித்துள்ள கருத்தையே தெரிவித்துள்ளார் அதில் கூடுதல் அம்சங்கள் ஏதும் இடம் பெறவில்லை.

எனவே, தனியர் கடந்த 13.10.2000 முதல் முன்னறிவிப்பின்றி பணிக்கு வராத செயலுக்காக துணை விதி 9(2)ன் கீழ் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டு மேற்கொள்ளப்பட்ட இவ்வொழுங்கு நடவடிக்கையினை முடிவு செய்யும் பொருட்டு தனியர் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள், அக்குற்றச்சாட்டுகளுக்கு தனியர் அளித்துள்ள விளக்கம், விசாரணை அலுவலரின் அறிக்கை அதன் மீது தனியரின் கூடுதல் விளக்கம் ஆகியவை தொடர்புடைய ஆவணங்களுடன் கவனமாக பரிசீலிக்கப்பட்டு தனியர் மீதான நான்கு குற்றச்சாட்டுகளும் நிரூபிக்கப்படுவதாக குறிப்பிடப்பட்டுள்ள விசாரணை அலுவலரின் அறிக்கை முழுவதுமாக ஏற்றுகொள்ளப்பட்டு, இறுதி ஆணையாக தனியரின் வருடாந்திர ஊதிய உயர்வினை ஓராண்டு காலத்திற்கு திரண்ட பயனின்றி நிறுத்தம் செய்து 23.02.2007 நாளிட்ட ஆணை வழங்கப்பட்டது.

மேலும் தனியர் நிரந்த துப்புரவு பணியாளராக பணிநியமனம் செய்யப்பட்டு ஐந்து ஆண்டுகள் நிறைவடையாத நிலையில் 13.10.2000 முதல் 02.12.2001 வரையிலான பணிக்கு வராத காலங்கள் ஆறுமாத காலத்திற்கும் மிகைப்படுவதால் அடிப்படை விதி 18(1)ஐ தளர்வு செய்ய நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி பெற்று அரசுக்கு முன்மொழிவு அனுப்பி அரசாணை பெற்ற பின்னர் வரன்முறைப்படுத்தப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

எனவே, திரு.எம்.கிருஷ்ணன், துப்புரவு பணியாளர், ரீச்-34, பகுதி-26, மண்டலம்.9, என்பவர் 13.10.2000 முதல் 02.12.2001 வரையிலான பணிக்கு வராத காலத்தினை வரன்முறைப்படுத்திட அடிப்படை விதி 18(1)ஐ தளர்த்தி உரிய அரசாணை வழங்கிடக்கோரி அரசுக்கு முன்மொழிவு அனுப்பிட நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது "

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:ம.அ.9.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ-18. மன்றச் செயலாளர்

**ம.க.கு.ந.க.எண்.அ1/1529/2005**
**ஆணையாளர் அவர்களின் 27.06.2009 நாளிட்ட குறிப்பு**

**22.07.2009 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :220/2009 பொருள் எண்.20

**பணிக்கு வராத காலம் வரன்முறைப்படுத்துதல்**

திரு.பி. ராதாகிருஷ்ணன், உதவியாளர், மத்திய கணக்கு குழுமம் (பணியிடம் சுகாதாரத்துறை) அவர்கள் 03.07.2003 முதல் முன்னறிவிப்பின்றி பணிக்கு வரவில்லை. சென்னை மாநகராட்சி மூன்றாம் மற்றும் நான்காம் நிலைப்பணி துணை விதி 9(2)ன் கீழ், கீழ்கண்ட குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டு 29.10.2003 தேதியிட்ட குற்றச்சாட்டு குறிப்பாணை வழங்கப்பட்டது.

1) 03.07.2003 மற்றும் 06.07.2003 ஆகிய தேதிகளில் முன்னறிவிப்பின்றி பணிக்கு வராமல் இருந்தது. 11.07.2003 அன்று விடுப்பு கடிதம் கொடுத்து 17.07.2003 அன்று பணிக்கு வந்து துணை ஆணையாளர் (சுகாதாரம்) அவர்கள் சந்திக்க கூறியதால் பணிக்கு வராமல் இருந்தது.

2) வாய் மொழியாக சுகாதார அலுவலர் அவர்கள் தனியரை துணை ஆணையர் (சுகாதாரம்) அவர்களை சந்திக்க அறிவுறுத்த 18.07.2003 அன்று முதல் இது நாள் வரை எந்தவித முன்னறிவிப்பின்றி மீண்டும் பணிக்கு வராமலிருந்தது.

3) முக்கிய இருக்கையான ஒழுங்கு நடவடிக்கை கோப்புகள் பராமரிக்கும் சி7 இருக்கைப் பணிகள் பாதிப்படைய காரணமாக இருந்தது.

4) அலுவலக நடைமுறை பணிகளுக்கு குந்தகம் விளைவித்தது.

குற்றச்சாட்டு குறிப்பாணைக்கு தனியர் அளித்துள்ள விளக்க கடிதத்தில் 03.07.2003 முதல் 17.07.2003 வரை மருத்துவ விடுப்பு கடிதம் அளித்துள்ளதாகவும் 18.07.2003 அன்று அப்போதைய நல அலுவலர் தன்னை பணியில் சேர அனுமதிக்கவில்லை எனவும் தெரிவித்துள்ளார்.

தனியரின் பணிப்பதிவேட்டு குறிப்பின்படி மருத்துவ விடுப்பு மொத்தம் 540 நாட்கள் 10.04.1994 அன்றுடன் நிறைவு செய்யப்பட்டுள்ளது. தனியர் மீது தொடரப்பட்ட ஒழுங்கு நடவடிக்கை விசாரணைக்கு திரு.பி. ராதாகிருஷ்ணன், உதவியாளர், ஆஜராகாததால்17.06.2004 தேதியிட்ட விசாரணை அலுவலரின் அறிக்கையில் குற்றம் சாட்டப்பட்ட நபர் 03.07.2003 மற்றும் 06.07.2003 ஆகிய தேதிகளில் எந்த வித முன்னறிவிப்புமின்றி பணிக்கு ஆஜராகவில்லை என்பதை அவர் 17.07.2003 அன்று விடுப்பு கடிதம் வழங்கியதின் மூலம் தெளிவாகியுள்ளது என்பதுடன் 18.07.2003 முதல் தொடர்ந்து பணிக்கு அவர் எந்த வித முன்னறிவிப்புமின்றி வராமலிருந்தது ஆவணங்களின் அடிப்படையிலும், சாட்சியங்களின் அடிப்படையிலும் குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபணமாகிறது என முடிவு தெரிவித்துள்ளார்

ஆணையாளரின் 08.01.2005 நாளிட்ட ஆணையில் பணியில் சேருமாறு அறிவுறுத்தி கடிதம் அனுப்பிய பிறகு கோப்பு அனுப்பவும் (Please send a letter asking him to join Duty then putup) என்று குறிப்பிட்டுள்ளதின் அடிப்படையில் 30.03.2005, 19.04.2005 மற்றும் 20.12.2005 தேதிய கடிதங்கள் தனியர் அளித்திருந்த விலாசத்திற்கு பதிவு தபாலில் அனுப்பப்பட்டது. பதிவு தபால்கள் பெற்றுக் கொள்ளப்படாமல் வெளியில் சென்றுள்ளார் எனவும், வாங்க மறுத்துள்ளார்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திரு.பி.ராதாகிருஷ்ணன், உதவியாளர் 08.01.2005 ல் ஆணையாளருக்கு மற்ற அலுவலர்களுக்கும் தன்னை மீண்டும் பணியில் சேர்க்குமாறு கேட்டு பதிவு தபால் அனுப்பியிருந்தார். ஆனால் பணியில் சேரவில்லை. 20.03.2006 தேதியிட்ட குறிப்பாணை திரு.பி.ராதாகிருஷ்ணன், உதவியாளர் ( பணியில் சேர்வதாக) பதிவு தபால் மூலம் ஆணையருக்கு அனுப்பியிருந்த தனது 19.08.2005 நாளிட்ட கடிதத்தில் குறிப்பிட்டுள்ள C/o பி.ராமச்சந்திரன், எண்.2, பார்த்திபன் தெரு, ராஜாஜி நகர், வில்லிவாக்கம், சென்னை–49 என்ற விலாசத்தில் 23.03.2006 அன்று ஒட்டி சார்பு செய்யப்பட்டிருந்தது.

திரு.பி.ராதாகிருஷ்ணன், உதவியாளர், மத்திய கணக்கு குழுமம் (பணியிடம் சுகாதாரத்துறை) அவர்கள் 03.07.2003 முதல் முன்னறிவிப்பின்றி விடுப்பு துய்த்தும் 18.07.2003 முதல் பணிக்கு வராமை குற்றத்திற்காக தொடரப்பட்ட ஒழுங்கு நடவடிக்கையில் திரண்ட பயனுடன் ஆறு மாதங்களுக்கு ஊதிய உயர்வு நிறுத்தம் செய்யவும் ( Stop his increment for Six months with cummulative effect) என்று 12.12.2005 அன்று ஆணையாளர் அவர்களால் ஆணை வழங்கப்பட்டுள்ளது.

**ம.க.கு.ந.க.எண்.அ1/1529/2005**

திரு.பி. ராதாகிருஷ்ணன், உதவியாளர், மத்திய கணக்கு குழுமம் (பணியிடம் சுகாதாரத்துறை) அவர்கள் முன்னறிவிப்பின்றி பணிக்கு வராத நிகழ்வில் தனியரை பணியில் சேர அனுமதித்தும் தனியர் பணியில் சேரவில்லை. இச்சூழ்நிலையில் 31.08.2006 அன்று வயது முதிர்வு ஓய்வு பெற இருந்தார். அன்னாருக்கு வழங்கப்பட்ட தண்டனையை செயல்படுத்த முடியாத சூழ்நிலையில் இந்நிகழ்வில் ஆணையாளர் வழங்கிய உத்தேச தண்டனையை ரத்து செய்யவும் அரசின் இறுதி ஆணை பெறவும் அரசுக்கு கோப்பு அனுப்பப்பட்டது. 26.07.2006 நாளிட்ட அரசுக் கடிதத்தில் மூன்று மற்றும் நான்காம் நிலைப்பணியாளர்களுக்கு ஒழுங்கு நடவடிக்கையில் ஒழுங்கு நடவடிக்கை அதிகாரி சென்னை மாநகராட்சி ஆணையர் என்பதால் அவரே இந்நிகழ்வில் இறுதி ஆணை வெளியிடலாம் என கருத்து தெரிவிக்கப்பட்டது.

எனவே, 18.07.2003 முதல் தொடர்ந்து மூன்றாண்டுகளுக்கு மேலாக முன்னறிவிப்பின்றி பணிக்கு வராமைக்காக ஆணையர் அவர்கள் தனியருக்கு திரண்ட பயனுடன் ஆறு மாதங்களுக்கு ஊதிய உயர்வு நிறுத்தம் செய்ய ஆணையிடப்பட்ட ( Stop his increment for Six months with cumulative effect ) ஆணையர் அவர்களின் ஆணையினை தனியர் பெற்றுக் கொள்ளாத காரணத்தினால் அவ்வாணையினை செயல்படுத்த முடியாததால் அன்னார் மீதான ஒழுங்கு நடவடிக்கையில் சென்னை மாநகராட்சி மூன்றாம் மற்றும் நான்காம் நிலைப்பணி ( ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) 1983 துணை விதி 9(2) ன் கீழ் தெரிவிக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களின் அடிப்படையில் இறுதி ஆணை வேண்டி கோப்பு சமர்ப்பிக்கப்பட்டது. 31.08.2006 தேதியிட்ட செயல்முறை ஆணையில் தனியருக்கு அபராதமாக ரூ.5000/- விதித்து ஆணையிடப்பட்டது.

31.08.2006 தேதியிட்ட செயல்முறை ஆணையில் தனியரின் வயது முதிர்வு ஓய்வு நாளான 31.08.2006 வரை பணிக்கு திரும்பாத நிலையில் 31.08.2006 அன்று பிற்பகல் வயது முதிர்வு காரணமாக ஓய்வு பெற்றவராக கருதி ( Deenmed to have been relieved from service ) ஆணை வழங்கப்பபட்டது.

